# ‘முதலமைச்சர் கோப்பை - 2023’ நிறைவு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த நேரு உள்விளையாட்டு அரங்கைப் பார்க்கும்போது, என் நினைவுகள் 44-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்குச் செல்கிறது.

இதே நேரு உள்விளையாட்டு அரங்கில்தான் கடந்த ஆண்டு அதன் தொடக்க நிகழ்ச்சியும் நிறைவு நிகழ்ச்சியும் நடைபெற்றது. நீங்கள் அனைவரும் அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். மற்ற விளையாட்டுப் போட்டிகளின் போது நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் போல் இல்லாமல், நமது தமிழ்நாட்டின், இந்திய நாட்டின் வரலாற்றை நமது மண்ணுக்கு விருந்தினர்களாக வந்த வெளிநாட்டு வீரர்களுக்குக் கலைநிகழ்ச்சிகள் மூலமாக நாம் அறிமுகப்படுத்தினோம். அதனால் நமக்குக் கிடைத்த பாராட்டு என்பது, நமது அரசுக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கே சொந்தமானது! அத்தகைய பெருமையைத் தேடித் தந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியின் போதுதான் ‘முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்’ என்று நான் அறிவித்தேன்.

15 விதமான விளையாட்டுகளில் பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என ஐந்து பிரிவுகளின்கீழ் நடத்தப்படும் என்று நான் அறிவிப்பு செய்தேன். அந்த அறிவிப்பை மிக வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டிய அமைச்சர் உதயநிதி அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். கடந்த மே 8-ஆம் நாள் முதலமைச்சர் கோப்பைகள் போட்டிக்கான ‘வீரன்’ சின்னத்தையும் அதற்கான பாடலையும் நான் வெளியிட்டேன். ஜூன்

30-ஆம் நாள் தொடங்கப்பட்ட இந்தப் போட்டிகள், இன்று நிறைவு விழா காண்கிறது.

உதயநிதி அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையே புத்துணர்வு பெற்றுள்ளது.

நான் 2006-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையில் இடம் பெற்ற போது, பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டது, இதே நேரு விளையாட்டு அரங்கத்தில்தான்!

### விளையாட்டுத் துறைச் செயல்பாடுகள்; எனக்குப் பெருமை அளிக்கிறது!

எனவே, இங்குள்ள விளையாட்டு வீரர்களைப் போல எனக்கும் நேரு விளையாட்டு அரங்கம் சிறப்பான வாய்ப்பைக் கொடுத்தது. அப்போது நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தேன். “அந்தத் துறையை நான் நிர்வகிப்பதைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது” என்று அப்போது முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்;

அதாவது, ஏராளமான திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதை பாராட்டும் வகையில் இப்படி உயர்வாகச் சொன்னார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அந்த வகையில் இப்போது எனக்கு விளையாட்டுத் துறையின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது!

### துறையால் அமைச்சர் பெருமையடைவதும் அமைச்சரால் துறை பெருமையடைவதும்!

நாள்தோறும் ஏராளமான போட்டிகள் நடைபெற்று வருகின்றன. எப்போது பார்த்தாலும் விளையாட்டு வீரர்களுடன் அமைச்சர் உதயநிதி அவர்கள் இருக்கிறார். விளையாட்டுத் துறையால் அமைச்சர் பெருமை அடைவதும் - அமைச்சர் உதயநிதியால் விளையாட்டுத் துறை சிறப்பு அடைவதுமான காட்சிகளை நான் காண்கிறேன்.

இவை எல்லாம் விளம்பரத்துக்காகச் செய்யப்படுபவை அல்ல. விளையாட்டுத் துறையின் செயல்கள் மூலமாக இத்தகைய பாராட்டுகள் கிடைக்கிறது.

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் தொன்மையான பாரம்பரிய விளையாட்டுகளான கபடி மற்றும் சிலம்பாட்டம் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

### வீரர்களின் உடல் திறன் மேம்பாடு! ரசிப்பவர்களின் மனதுக்கு மகிழ்ச்சி!

விளையாடும் வீரர்களுக்கு உடல் திறன் மேம்படுகிறது. அதனைப் பார்த்து ரசிப்பவர்களின் மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. விளையாட்டைக் காண வந்தவர்களில் நாளைய சாம்பியன்களும் நிச்சயம் இருப்பார்கள். இதுதான் விளையாட்டின் சிறப்பம்சம்.

முந்தைய காலங்களில் பள்ளி, கல்லூரிகள் என இரண்டு பிரிவுகளில் மட்டுமே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வந்தன. இப்போது மாற்றுத் திறனாளிகள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் என்ற பிரிவுகள் இணைக்கப்பட்டுள்ளன.

முன்பு 10 விதமான போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போது 15 விதமான போட்டிகள் நடத்தப்படுகின்றன. போட்டிகளைச் சிறப்பாக நடத்த மாவட்டக் குழு – மாநிலக் குழு அமைக்கப்பட்டது. கிரிக்கெட், சதுரங்கம், பீச் வாலிபால் போன்ற போட்டிகள் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

### போட்டிகள் சீராக நடைபெறுவது கண்டு மகிழ்கிறேன்!

முதலமைச்சர் கோப்பை போட்டிகளை நடத்துவதற்கு 50 கோடியே 86 லட்சம் ரூபாய் நிதியை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்தது. இதில் பரிசுத் தொகையாக மட்டும் 28 கோடியே 30 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இந்தப் போட்டிகள் மிகச் சீராக நடைபெற்றதை அறிந்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்ட அளவிலான நடைபெற்ற போட்டிகளில், 3 லட்சத்து 70 ஆயிரம் வீரர்களும் வீராங்கனைகளும் கலந்து கொண்டுள்ளார்கள். அதன்பிறகு மண்டல அளவில் போட்டிகள் நடந்துள்ளன.

> ## முதலமைச்சர் கோப்பையின் வெற்றி!
>
> *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் மட்டும் 17 இடங்களில் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகள் மட்டும் மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டுள்ளன. அதில் 3 லட்சத்து 70 ஆயிரம் பேர் பங்கெடுத்ததைத்தான் முதலமைச்சர் கோப்பைக்கான வெற்றியாக நான் கருதுகிறேன். போட்டிகளில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது ஒருபக்கம் என்றால் - இந்தப் போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடித்ததன் மூலமாக இந்த விளையாட்டுத் துறையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மாபெரும் வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு இங்கே பதிவு செய்கிறேன்.*

மண்டல அளவிலான போட்டிகளில் 27 ஆயிரத்து 54 வீரர் - வீராங்கனைகள் பங்கெடுத்துள்ளார்கள். இவர்களை வைத்து மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் மட்டும் 17 இடங்களில் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகள் மட்டும் மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டுள்ளன. அதில் 3 லட்சத்து 70 ஆயிரம் பேர் பங்கெடுத்ததைத் தான் முதலமைச்சர் கோப்பைக்கான வெற்றியாக நான் கருதுகிறேன்.

போட்டிகளில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது ஒருபக்கம் என்றால் – இந்தப் போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடித்ததன் மூலமாக இந்த விளையாட்டுத் துறையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மாபெரும் வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு இங்கே பதிவு செய்கிறேன்.

போட்டிகளில் எவ்வளவு பேர் பங்கெடுக்கிறார்கள் - எவ்வளவு வீரர்களும் – வீராங்கனைகளும் உங்களை நோக்கி வருகிறார்கள் என்பதுதான் போட்டி நடத்துபவர்கள் அடைய வேண்டிய பெருமை! அதனால்தான் பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளைப் பற்றி நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஒற்றையர் போட்டியாக இருந்தால் அதிகபட்சம் ஒரு லட்சம் ரூபாயும் - குழுப் போட்டியாக இருந்தால் அதிகபட்சம் 9 லட்சம் ரூபாயும் பரிசுத் தொகை பெறும் மாபெரும் போட்டியாக இது அமைந்துள்ளது.

மாவட்ட அளவில் வெற்றி பெற்ற 27 ஆயிரம் பேரையும் சென்னைக்கு அழைத்து வர சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. சென்னையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளிர்சாதன வசதி கொண்ட அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வீரர் - வீராங்கனைகள் போட்டி நடைபெறும் இடங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்குச் சென்று வர

72-க்கும் மேற்பட்ட பேருந்து வசதிகளும், மருத்துவ வசதிகளும் செய்யப்பட்டது.

போட்டிகளைச் சிறப்பாக நடத்திட ஏதுவாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மாநகரப் போக்குவரத்துக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் காவல் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது. இதுதான் மிக மிக முக்கியம்!

### போட்டிகளுக்கான சிறப்பான சூழல்; நமது அரசுக்குக் கிட்டிய நற்பெயர்!

‘டீம் ஸ்பிரிட்’ என்று விளையாட்டுக் களத்தில் சொல்வார்கள். விளையாட்டுப் போட்டிகளை நடத்தும்போதும் பல்வேறு துறையினருடன் இணைந்து செயல்படக்கூடிய இத்தகைய ’டீம் ஸ்பிரிட்’ தேவை. அந்த வகையில், போட்டிகளை நடத்துவதற்கான சிறப்பான சூழலை உருவாக்குவதில் நமது அரசு நற்பெயரைப் பெற்றிருக்கிறது.

நான் ஆரம்பத்தில் சொன்னேனே... மிகக் குறுகிய காலத்தில், அதாவது நான்கே மாதங்களுக்குள் சிறப்பான ஏற்பாடுகளைச்செய்து 44-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியை நாம் நடத்திக் காட்டினோம்.

நமது விருந்தோம்பலைச் சிலாகித்து வெளிநாட்டு வீரர்கள் பலரும் தங்கள் ட்விட்டர் பக்கங்களில் பகிர்ந்தார்கள். உலக விளையாட்டு வீரர்களை மட்டுமல்ல, உள்ளூர் வீரர்களையும் நாம் மரியாதையுடன்தான் நடத்துவோம் என்பதற்கு எடுத்துக் காட்டுதான் இந்த விழா!

இதனை நான் சொல்வதற்கு என்ன காரணம் என்றால், போட்டிகளில் பரிசுகள் வழங்குவதோடு அரசாங்கத்தின் கடமை முடிந்துவிடவில்லை. விளையாட்டு வீரர்களை மதித்து, அன்புடன் வரவேற்று அவர்களுக்கு வெற்றிகரமான சூழலையும் உருவாக்கித் தர வேண்டியதும் அரசின் கடமை! அதனை தமிழ்நாடு விளையாட்டுத் துறை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறது.

மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து வீரர்- வீராங்கனைகளையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். பலருக்குப் பதக்கங்கள் கிடைக்காமல் போயிருக்கலாம். அது முக்கியமல்ல; பங்கேற்புதான் முக்கியம்! விளையாட்டில் வெற்றி என்பதே பங்கேற்பதும்; சளைக்காமல் போராடுவதும்தான்!

தனிப்பட்ட முறையில் எனக்கு விளையாட்டின்மீது இருக்கும் ஆர்வத்தைப் பலரும் அறிவீர்கள். அதனால்தான், கடுமையான பணிச்சூழலுக்கு இடையிலும் இந்த நிகழ்ச்சிக்கு நான் இங்கே வந்திருக்கிறேன்.

### விளையாட்டில் நேர்மையும் அறமும் வேண்டுமென விரும்பியவர் கலைஞர்!

நான் மட்டுமல்ல; தலைவர் கலைஞர் அவர்களும் மிகப்பெரிய விளையாட்டு ரசிகர்! அதனால்தான் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தினார்.

2006-ஆம் ஆண்டு நடைபெற்ற Asian Games-இல் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை சாந்தி அவர்களை, ”ஓடியது இந்தக் கால்கள் தானே!” என ஆதரித்து ஊக்கப்படுத்தினார்.

தலைவர் கலைஞர் அவர்கள் நல்ல விளையாட்டுப் போட்டிகளை ரசிக்கக் கூடியவர். விளையாட்டில் நேர்மையும் அறமும் வேண்டும் என்று விரும்பியவர்.

தலைவர் கலைஞரிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள நிறைய இருக்கின்றன. வெற்றியையும் தோல்வியையும் இயல்பாக எடுத்துக் கொண்டு சளைக்காமல் போராடியவர் அவர். இதைத்தான் விளையாட்டுக் களத்தில் ’ஸ்போர்ட்ஸ்மேன் ஷிப்’ என்கிறார்கள். அரசியலில் அவர் ’ஸ்டேட்ஸ்மேனாக’ இருந்தார். அரசியலை அணுகுவதில் அவரிடம் ‘ஸ்போர்ட்ஸ்மேன் ஷிப்’ இருந்தது.

விளையாட்டில் நீங்கள் அனைவரும் அறத்தைப் பேண வேண்டும் என்று சொல்லி, மாநில அளவிலான போட்டிகளில் பங்கெடுத்து பதக்கங்கள் பெற்ற அனைவரையும் பாராட்டுகிறேன்.

நீங்கள் மேன்மேலும் வெற்றிகளைக் குவிக்க வேண்டும். மாநில அளவில் பல போட்டிகளில் பங்கேற்றுள்ள நீங்கள் இனி வருங்காலத்தில் இந்திய அளவிலான போட்டிகளில் பங்கேற்க வேண்டும். விளையாட்டு வீரர்களான நீங்கள் மட்டுமல்ல; இந்தியாவுக்காகத்தான் நாங்களும் பாடுபடுகிறோம்.

எங்கள் அணியும் ‘இந்தியா’ அணிதான்! அதன் வெற்றிக்காகத்தான் நாங்களும் ஒருங்கிணைந்து- ’டீம் ஸ்பிரிட்டுடன்’ பாடுபடுகிறோம்.

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிப்பதைப் போலவே-விளையாட்டு மீதான ஆர்வத்தை அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஏற்படுத்த வேண்டும், வெற்றிக்காகப் பாடுபட வேண்டும் என்று அமைச்சர் உதயநிதி அவர்களையும் விளையாட்டுத் துறை அதிகாரிகளையும் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

### இளைய சக்தி; ஈடு இணையற்ற சக்தி!

அப்படிச் செய்தால் தமிழ்நாட்டின் இளைய சக்தியானது ஈடு இணையற்ற சக்தியாக வளரும் என்று சொல்லி அனைவரையும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

**2018 - 19 க்குப் பின் உயர் கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டம் மறுசீரமைக்கப்படவில்லை! மிகத் தரமாகச் சீரமைக்கப்பட்ட**

# ‘புதிய மாதிரி பாடத் திட்டம்’ 2023 - 24 கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்!

## தன்னாட்சிக் கல்லூரிகளின் தன்னாட்சி உரிமைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விளக்கம்!

**சென்னை, ஜூலை 27–**

**புதிய மாதிரி பாடத்திட்டத்தை** (Model Syllabus) **2023–24 கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்துதல் குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விடுத்துள்ள அறிக்கையில் ‘‘2018 – 19 க்குப் பின் சில உயர் கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டங்கள் மறு சீரமைக்கப் படவில்லை. மிகச் சிறப்பாக மறுசீரமைக்கப்பட்ட ‘புதிய பாடத் திட்டம்’ 2023–24 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்படும்’’ என்றும், ‘‘தன்னாட்சிக் கல்லூரிகளின் தன்னாட்சி உரிமைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது!’’ என்றும் விளக்கமளித்துள்ளார்.**

இது தொடர்பான - உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியின் அறிக்கை வருமாறு :-

நான் (உயர்கல்வித்துறை அமைச்சர்), 26-08-2021 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தபடி, பாடத்திட்ட மறுசீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்த, மாதிரி பாடத்திட்டம் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளின் தன்னாட்சி உரிமைக்கு பாதிப்பில்லாத வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளின் உரிமையை தமிழ்நாடு அரசு மதித்து அங்கீகரிக்கிறது.

மாதிரிப் பாடத்திட்டம் மறுசீரமைக்கப்படுவதன் முக்கிய நோக்கம் மாணவர்களின் நலனை மேம்படுத்துவதாகும். பாடப்பிரிவுகளுக்கு இடையே 75% இணைத்தன்மை இல்லாத காரணத்தால் பணி ஆணை பெற்றும் பணியில் சேர முடியாமல் சிரமப்படும் மாணவர்களுக்கு உதவிடும் வகையிலும், உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையே இடமாறுதல் கோரும் மாணவர்களுக்கு பயன்படும் வகையிலும் இந்த, மாதிரி பாடத்திட்டம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

### மிகத் தரமாக மறுசீரமைப்பு!

2018 - 2019க்குப் பின், சில உயர்கல்வி நிறுவனங்களில் பாடத்திட்டம் மறுசீரமைக்கப்படவில்லை. இதை ஈடுசெய்யும் வகையில் இந்த, மாதிரிப் பாடத்திட்டம் (2023-2024) மிகத் தரமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.



மாணவர்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட இத்திட்டத்தின் உயரிய நோக்கம்; ஊடகங்கள் மற்றும் கல்வியாளர்களிடையே சரியாகச் சென்றடையும் பொருட்டு இந்த விளக்கம் வெளியிடப்படுகிறது.

எனது (உயர்கல்வித்துறை அமைச்சர்) அறிவிப்பிற்கிணங்க 30-9-2021, 1-11-2021 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறை வழங்கிய அறிவுறுத்தலின்படியும், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற சட்டம் 1992 பிரிவு 10 (2) (H) விதியின்படியும், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் கடந்த ஓராண்டாக மேற்கொண்ட முயற்சியால் ஐ.ஐ.டி., அண்ணா பல்கலைக்கழகம், 10 கலை அறிவியல் பல்கலைக்கழகங்கள், தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் இதர கல்லூரிகளிலிருந்தும் 922 பேராசிரியர்களைப் பாடத்திட்டக்குழு உறுப்பினர்களாகக் கொண்டு 870 பாடத்திட்டக்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, தொழில் துறையினரின் ஆலோசனைகள் பெறப்பட்டு மிகத்தரமான முறையில் 301 மாதிரி பாடங்கள் (166 இளநிலைப் பாடங்கள், 135 முதுநிலைப் பாடங்கள்) மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் “நான் முதல்வன்” மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்பு, தொழில் முனைவு மற்றும் திறன்மேம்பாட்டு அம்சங்கள் மாணவர்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் இம்மாதிரிப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

தொழில் துறை வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து, வளர்ந்து வரும் தொழில் துறை தேவைகளுக்கு ஏற்ப B.Sc. Artificial Intelligence, B.Sc. Internet of things, B.Sc. Computer Science, Artificial Intelligence and Machine Learning, B.Sc. Computer Science with Block Chain Technology, B.Sc. Computer Science with Augmented Reality and Virtual Reality போன்ற பல புதிய மாதிரிப் பாடத் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தயாரித்த மாதிரி பாடத்திட்டங்களைப், பல்கலைக்கழக பாடத்திட்டக்குழுக்களின் (Board of Studies) ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துமாறு தன்னாட்சிக் கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து இணைவு பெற்ற கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகங்கள் அனுப்பிவைத்தன. இதன் அடிப்படையில், 90 சதவீத உயர்கல்வி நிறுவனங்கள் மாதிரிப் பாடத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன.

### இளநிலை பட்டப்படிப்பு பாடத்திட்டம்!

இளநிலை பட்டப்படிப்பிற்கான பாடத்திட்டத்தில் கீழ்க்காணும் ஐந்து பிரிவுகள் இடம் பெற்றுள்ளன:-

பகுதி I மொழி

பகுதி II ஆங்கிலம்

பகுதி III முக்கியப் பாடங்கள் மற்றும் விருப்பப் பாடங்கள்

பகுதி IV திறன் மேம்பாட்டுப் பாடங்கள்

பகுதி V மதிப்புக் கூட்டுக்கல்வி.

இப்பாடத் திட்டத்தில் உள்ள பகுதி I, பகுதி II, பகுதி III ல் உள்ள விருப்பப் பாடங்கள் (Elective papers), பகுதி IV, பகுதி V ல் உள்ள பாடங்களில் பல்கலைக்கழகங்கள், தன்னாட்சிக் கல்லூரிகள் தங்கள் தேவைக்கேற்ப தாங்கள் விரும்பும் பாடங்களைப் பாடத்திட்டமாக வைத்துக்கொள்ளலாம். பாடங்களுக்கிடையே இணைத்தன்மை இருப்பதற்காக இப்பாடத்திட்டத்தில் பகுதி III இல் உள்ள முக்கிய பாடங்கள் (Core Papers) 75 சதவீதம் மட்டும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற கருத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

### மாற்றிக் கொள்ளும் பாடங்கள்!

பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளின் தன்னாட்சி உரிமைக்கு எதிரான கருத்து இந்த, மாதிரி பாடத்திட்டத்தில் இல்லை. பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளின் தன்னாட்சி உரிமையை மதிக்கும் நோக்கத்தில் மாதிரி பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

மாணவர் நலன் கருதி அமைக்கப்பட்ட இம்மாதிரி திட்டம் கீழ்க்காணும் உரிமைகளை பாதுகாக்கிறது :-

பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளின் தன்னாட்சி உரிமைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

ஆசிரியர்களின் பணிநிலையில் (work load or service condition) எந்தப் பாதிப்பும் ஏற்படாது. ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பு மற்றும் பணிச் சுமை போன்றவற்றில் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் மாதிரி பாடத்திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

முக்கியப் பாடங்களையும் (core papers), விருப்பப் பாடங்களையும் (Elective Papers) செய்முறை பயிற்சிகளையும் (practicals) பருவங்களுக்கிடையே (semesters) மாற்றிக் கொள்ளலாம்.

பல்கலைக்கழகங்களும், தன்னாட்சிக் கல்லூரிகளும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப மதிப்பீடுகளில் (Assessment) மாற்றங்கள் செய்து கொள்ள உரிமை உண்டு. அவர்களின் தன்னாட்சி உரிமைக்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது.

இந்த கல்வி ஆண்டு முதல் (2023-2024) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாடத்திட்டத்தில் ஏதேனும் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பின், ஆண்டு இறுதியில் கல்வியாளர்களுடன் கலந்து ஆலோசித்து சரி செய்யப்படும்.

மாதிரி பாடத்திட்டம் தொடர்பாக, அனைத்து தன்னாட்சிக் கல்லூரி முதல்வர்களுடன் 02.08.2023 அன்று எனது (உயர்கல்வித் துறை அமைச்சர்) தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும். தன்னாட்சிக் கல்லூரிகளின் தன்னாட்சி உரிமைக்கு பாதிப்பு இல்லாமல் அவர்களின் கருத்துக்கள் கேட்டு தீர்வு காணப்படும்.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த மாதிரி பாடத்திட்டம் தன்னாட்சிக்கு பாதகமில்லாமல் உருவாக்கப்பட்டு, அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்களுடன் நடத்தப்பட்ட இரு கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விளக்கமளித்துள்ளார்.

---

# தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் பொ.சிவபத்மநாதன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, சுரண்டை நகரச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திரு. **ஜெயபாலன்** அவர்கள் தென்காசி தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 25.7.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.